

முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு இந்திய ஜனநாயக மீட்பு இயக்கம் சார்பாக திருச்சி அரியமங்கலத்தில் ‘இளைஞர்கள் கருத்தரங்கம்’ அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் ‘தேசியக் கல்விக் கொள்கையும் இந்தியாவின் எதிர்காலமும்’ எனும் தலைப்பில் டாக்டர் பொன்ராஜ் வெள்ளைச்சாமி (மேனாள் குடியரசுத் தலைவர் டாக்டர் ஏ. பி.ஜே.அப்துல்கலாம் அவர்களின் அறிவியல் ஆலோசகர் பொன்ராஜ் &IDRM Convenor), ‘இன்றைய இளைஞர்களுக்கு இன்றைய சவால்கள்’ எனும் தலைப்பில் ருபினி (எழுத்தாளர் சமூகச் செயற்பாட்டாளர் ஆகியோர், ‘மதநல்லிணக்கம் தமிழர் மரபு’ எனும் தலைப்பில் அருணன் (ஒருங்கிணைப்பாளர், தமிழ்நாடு மக்கள் ஒற்றுமை மேடை) அவர்களும் சிறப்புரையாற்றினார்கள்.‘சமூகநீதிக் காவலர்’ வி.பி.சிங் அவர்களின் பிறந்தநாளை முன்னிட்டு, நிகழ்வின் தொடக்கத்தில் முத்தமிழறிஞர் கலைஞர் மற்றும் மேனாள் பிரதமர் வி.பி.சிங் ஆகியோரின் திருவுருவப் படங்களுக்கும் மலர்தூவி மரியாதை செலுத்தினார்கள். நிகழ்வின் இறுதியாக மாநகர கழகச் செயலாளர் மு.மதிவாணன் நன்றி உரையாற்றினார்.




ஈரோடு தெற்கு மாவட்டம், வீரப்பன்சத்திரம் பகுதி கழக இளைஞரணி சார்பில் மாவட்ட கழக செயலாளரும், அமைச்சருமான சு.முத்துச்சாமி வழிகாட்டுதலின்படி பகுதி கழக செயலாளர் வி.சி.நடராஜன் ஏற்பாட்டில் முத்தமிழறிஞர் கலைஞர் அவர்களின் 102வது பிறந்தநாள் விழா மற்றும் ”நாடு போற்றும் நான்காண்டு இது தொடரட்டும் பல்லாண்டு திராவிட மாடல் அரசின் சாதனை விளக்க தெருமுனை பிரச்சார கூட்டத்தில் ஈரோடு கிழக்கு சட்டமன்ற உறுப்பினர் வி.சி.சந்திரகுமார், ஈரோடு நாடாளுமன்ற உறுப்பினர் கே.இ.பிரகாஷ் ஆகியோர் கலந்து கொண்டு சிறப்புரையாற்றினார்கள். கூட்டத்தில் பவானி கண்ணன், கௌரி மனோகரி, வீரமணி ஜெயக்குமார், மு.சுப்ரமணியன், ஆ.செந்தில்குமார், க.சென்னையன், செல்லப்பொன்னி, ப.க.பழனிச்சாமி இரா.சேகரன் கே.சந்திரசேகர் மாவட்ட இளைஞரணி அமைப்பாளர் ஜெ.திருவாசகம் மாமன்ற உறுப்பினர்கள் புனிதா சக்திவேல், மல்லிகா நடராஜன் மற்றும் பலர் கலந்து கொண்டனர்.

### ஜுலை 8 அன்று சேலத்தில் நடைபெறுகிறது! திருச்சி சிவா எம்.பி. சிறப்புரை!

# தி.மு.க. அயலக அணி மாவட்ட அமைப்பாளர்கள் - துணை அமைப்பாளர்கள் கூட்டம்!

### அயலக அணியின் செயலாளர் – எம்.எம்.அப்துல்லா எம்.பி. அறிக்கை!

சென்னை, ஜூன் 30 -

தி.மு.க. அயலக அணி, மாவட்ட நிர்வாகிகள், மாவட்ட தலைவர், துணைத் தலைவர், மாவட்ட அமைப்பாளர்கள், துணை அமைப்பாளர்கள், ஆலோசனைக் கூட்டம், குறித்து கழக அயலக அணி செயலாளர் நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எம். அப்துல்லாவின் அறிக்கை வருமாறு,

கழக அயலக அணி மாநில மாவட்ட நிர்வாகிகள் ஆலோசனைக் கூட்டம் மற்றும் கலைஞர்

நூற்றாண்டு நிறைவு கருத்தரங்கம் பவள விழா கொண்டாட்டம் 8.7.2025-செவ்வாய்க்கிழமை அன்று காலை 9 மணியளவில் சேலம் - அருணாசலம் தெரு - காந்தி சிலை அருகில் உள்ள நேரு கலையரங்கில் கழக அயலக அணி தலைவர் நாடாளுமன்ற உறுப்பினர் டாக்டர் கலாநிதி வீராசாமி முன்னிலையில், எனது (எம்.எம்.அப்துல்லா) தலைமையில் நடைபெறுகிறது.

கழக அயலக அணி இணை - துணைச் செயலாளர்கள் டாக்டர் செந்தில் குமார், வழக்கறிஞர்மனோ ராஜ் சண்முகசுந்தரம், வழக்கறிஞர் புகழ்காந்தி, துணைச் செயலாளர்கள், சேலம் உமாராணி, வழக்கறிஞர் பரிதிஇளம்சுருதி, வழக்கறிஞர் கன்னிகை ஜி.ஸ்டாலின், விஜயன் ராமகிருஷ்ணன், முத்துவேல் ராமசாமி, சேகர் ஜெய் மனோகரன், குமரி ஏ பாபு வினிபிரேட், ஆகியோரும் முன்னிலை வகிக்க, நடைபெறும் இக்கூட்டத்தில் அயலக அணி பொறுப்பு துணைப் பொதுச் செயலாளர் - நாடாளுமன்ற உறுப்பினர் திருச்சி சிவா கலந்து கொண்டு ஆலோசனை வழங்குகிறார்,

இக்கூட்டத்திற்கு அனைத்து மாவட்ட அயலக அணி நிர்வாகிகளும் தவறாமல் கலந்து கொண்டு சிறப்பிக்க வேண்டுகிறேன்,

பொருள் :

1 கழக ஆக்கப் பணிகள்,

2 .2026 சட்டமன்றத் தேர்தல்.

இவ்வாறு எம்.எம். அப்துல்லா எம்.பி. தெரிவித்துள்ளார்.

### என்.இளையபொருமாள் தலைமை! மயிலாடுதுறை வடக்கு ஒன்றியம்

# கடலங்குடியில் தெரு முனைப் பிரச்சாரக் கூட்டம்!

### நிவேதா எம்.முருகன், என்.இளையராஜா, ஆடுதுறை உத்திராபதி சிறப்புரை!

மயிலாடுதுறை, ஜூன் 30 -

மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை வடக்கு ஒன்றிய தி.மு.க. இளைஞர் அணி சார்பில் முத்தமிழ் அறிஞர் கலைஞர் அவர்களின் பிறந்த hநள் விழா மற்றும் திராவிட மாடல் அரசின் நான் காண்டு சாதனை விளக்க தெருமுனை பிரச்சாரக் கூட்டம் கடலங்குடி கடைத் தெருவில் நடைபெற்றது. தெரு முனை பிரச்சாரக் கூட்டத்திற்கு மயிலாடுதுறை வடக்கு ஒன்றியச் செயலாளர் என். இளையபெருமாள் தலைமை தாங்கினார். ஒன்றிய இளைஞர் அணி அமைப்பாளர் எம்.எஸ். பிரகாஷ் வரவேற்றார். மாவட்ட இளைஞர் அணி அமைப்பானர் எம். கே.மருது, துணை அமைப்பாளர்கள் சௌ.சர்வோதயன், எம்.எஸ்.விஜய், ஜெ.ஜுபையர், கே.வினோத்பாண்டியன், எஸ்.ஆனந்தன், கோசி.மதி.திருமாவளவன், ஒன்றியக் கழக நிர்வாகிகள் அவைத்தலைவர் எம்.சுப்ரமணியன், மாவட்ட பிரதிநிதிகள் எஸ்.சுரேஷ், ஜி.குருமூர்த்தி, எம்.கே.ஸ்டாலின், ஒன்றிய துணைச் செயலாளர்கள் வி. சுரேந்தர், ஏ.சரவணன், பிரபா பாலாஜி, பொருளாளர் எம்.ரவி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.

கூட்டத்தில் மயிலாடுதுறை மாவட்டக் கழகச் செயலாளரும், பூம்புகார் சட்ட மன்ற உறுப்பினர் நிவேதா எம்.முருகன், மாநில இளைஞர் அணி துணைச் செயலாளரும், தாட்கோ தலைவர் என். இளையராஜா, தலைமைக் கழக பேச்சாளர் ஆடுதுறை மு.உத்திராபதி, இளம் பேச்சாளர் கோ.இரகுநாத் ஆகியோர் சிறப்புரை யாற்றினார்கள்.

கூட்டத்தில் மயிலாடுதுறை மத்திய ஒன்றியச் செயலாளர் ஞான.இமையநாதன், மாவட்ட மகளிர் அணி அமைப்பாளர் சாந்தி, ராமலிங்கம் மாவட்ட சார்பு அணி துணை அமைப்பாளர்கள் வை.அர்ச்சுணன்,

ஜி.டெய்சி, எம்.பிரேம்குமார், கதிர்ராதாகிருஷ்ணன், ஆர்.ராஜ்குமார், பி.பிரகாஷ், வி.விஜயகுமார் மயிலாடுதுறை வடக்கு ஒன்றிய மகளிர் அணி மைப்பாளர் எம். ராமாவதி, ஒன்றிய துணை அமைப்பாளர்கள் பா.பாலாஜி,

எச்.ஹெஜ்முகமது, ஏ.தினேஷ்குமார், என். ஆனந்த், எஸ்.கவாஸ்கர், கே.பிரபாகரன், கடலங்குடி கிளை நிர்வாகிகள் கே.அன்புச்செல்வன், ஆர். அம்மைநாதன், எம்.வீராசாமி, கே.பார்த்தசாரதி, பி.ராதா, என்.செந்தில், ஏ.கவியரசி, சி.கரிகாலன், எஸ்.காளிமுத்து, பி.பாலமுருகன், ஆர்.ராஜகுரு, கே.மதியழகன், முகமது புகாரி, பாக்கியலெட்சுமி மற்றும் கழக நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் ஒன்றிய இளைஞர் அணி துணை அமைப்பாளர் அ.முத்தமிழ்ச்செல்வன் நன்றி கூறினார்.



திருப்பூர் வடக்கு மாவட்ட, மாநகர, ஒன்றிய, பகுதி, வட்டக் கழக நிர்வாகிகள், பாக ஒருங்கிணைப்பாளர்கள் ஆலோசனைக்கூட்டம் அவைத்தலைவர் க.நடராசன் தலைமையில் வடக்கு மாநகர பொறுப்பாளர் ஈ. தங்கராஜ், தொகுதி பார்வையாளர் ராம்குட்டி முன்னிலையில் நடைபெற்றது. இக்கூட்டத்தில் திருப்பூர் வடக்கு மாவட்டப் பொறுப்பாளர், மாநகராட்சி மேயர் ந.தினேஷ்குமார் ஆலோசனை வழங்கி உரையாற்றினார். இதில் மாவட்ட, மாநகர நிர்வாகிகள்,கே எம் ஒன்றிய, நகர, பகுதி, வட்டக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

## நீலகிரி மாவட்டம்

# தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மற்றும் பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புக்கான தேர்தல் தேர்தல் முடிவு

## தலைமைக் கழக அறிவிப்பு!

“திராவிட முன்னேற்றக் கழகத்தின் 15வது பொதுத் தேர்தலில் நீலகிரி மாவட்டத்தில், தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட கே.எம்.ராஜு அவர்கள் மாவட்டப் பொறுப்பாளராக நியமிக்கப்பட்டதாலும், முஸ்தபா அவர்கள்மீது நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ள தாலும்,2 (இரண்டு) தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் நிரப்பப்பட வேண்டி இருப்பதால்; பொதுக்குழு உறுப்பினர்களாக தேர்ந்தெடுக்கப்பட்ட திருமதி ஷீலாகேத்ரின் அவர்கள் மறைவெய்திய காரணத்தாலும் - க. ராஜா (எ) ராஜகுமார் மற்றும் மா.தொரை ஆகியோர் ஒன்றியக் கழகப் பொறுப்பாளர்களாக நியமிக்கப்பட்டதாலும், 3 (மூன்று) பொதுக்குழு உறுப்பினர்கள் நிரப்பப்பட வேண்டி இருப்பதால், மேற்சொன்ன பொறுப்புகளுக்கான தேர்தல் நடைபெற உள்ளதையொட்டி, இப்பொறுப்புகளுக்கு போட்டியிடுவோர் அதற்கென உள்ள படிவத்தில் முறைப்படி பூர்த்தி செய்து **2025, ஜுன் 25 (புதன்கிழமை) அன்று ரூ.25000/- வீதம் தலைமைக் கழகத்தில் அளித்து இரசீது பெற்றுக் கொள்ள வேண்டும்.**” என தலைமைக் கழகத்தின் சார்பில் அறிவிக்கப்பட்டதையொட்டி;

நீலகிரி மாவட்டம், இரண்டு தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் பொறுப்புகளுக்கு **கே. தம்பி இஸ்மாயில், திருமதி சுனிதா நேரு** ஆகிய இரண்டு பேர் மற்றும் மூன்று பொதுக்குழு உறுப்பினர்கள் பொறுப்புகளுக்கு அ.லியாகத் அலி, ந.மகேஷ், திருமதி எம்.வாணீஸ்வரி ஆகிய மூவர் மட்டுமே வேட்புமனு தாக்கல் செய்திருந்த காரணத்தால், அவர்களது மனு ஏற்கப்பட்டு,

**நீலகிரி மாவட்டம், தலைமைச் செயற்குழு உறுப்பினர்களாக**

**கே.தம்பி இஸ்மாயில்**,30/40, பக்கீர் முகமது தெரு, மெயின் பஜார், உதகை, நீலகிரி மாவட்டம்-643 001 **அவர்களும்;**

**திருமதி.சுனிதா நேரு** 72-பி, குமரன் நிலையம், காமராஜபுரம், உழவர்சந்தை முன்புறம், குன்னூர், நீலகிரி மாவட்டம் **அவர்களும்;**

**நீலகிரி மாவட்டம், பொதுக்குழு உறுப்பினர்களாக**

**அ.லியாகத் அலி** 13/168, காசிம் வயல், கூடலூர் பஜார், நீலகிரி மாவட்டம் - 643 212 **அவர்களும்;**

**ந.மகேஷ்**, 1/37, கெந்தொரை கிராமம் & அஞ்சல், உதகை, நீலகிரி மாவட்டம் - 643 002 **அவர்களும்;**

**திருமதி. எம்.வாணீஸ்வரி**, 8பி-1, பீட்டன்ஸ் சாலை, பேபி ஹால் அருகில், உதகை, நீலகிரி மாவட்டம்-643001 **அவர்களும் தேர்ந்தெடுக்கப்பட்டதாக** அறிவிக்கப்படுகிறது.

**“ அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் : 28.06.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### துறையூர் க. மகாராசன்
### ஜுன் 30 (2014)



இளமைக் காலம் முதலே கழகத்தில் மிகுந்த ஈடுபாடு கொண்டு பணியாற்றியவர்.

துறையூர் நகரத்தில் மாவட்ட பிரதிநிதியாகவும், அதன் பின்னர் இருபத்தோறு ஆண்டுகள் தொடர்ந்து நகரக் கழகச் செயலாளராகவும் கழகப் பணியாற்றியவர்.

1986–ல் நகர்மன்றத் தலைவராகவும், 2006–ல் நகர்மன்ற துணைத் தலைவராகவும் பொறுப்பு வகித்து, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

கழகம் அறிவித்த அனைத்து போராட்டங்களிலும் கலந்து கொண்டு சிறை சென்றவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**

## தென்காசி வடக்கு மாவட்டம்

# வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றியக் கழகப் பொறுப்பாளர் நியமனம்!

## தலைமைக் கழக அறிவிப்பு!

தென்காசி வடக்கு மாவட்டம், வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றியச் செயலாளராக பொறுப்பு வகித்து வரும் கோ.பூசைப்பாண்டியன் அவர்கள், தனது உடல்நிலை காரணமாக முழு ஈடுபாட்டுடன் கழகப் பணியாற்ற முடியாத காரணத்தால், அவரை அப்பொறுப்பிலிருந்து விடுவித்து, கழகப் பணிகள் செவ்வனே நடைபெற, அவருக்குப் பதிலாக, **டி.எம்.எஸ். அன்புக்கரசு** (7/53ஏ, மேலத் தெரு, வடமலாபுரம், தென்காசி மாவட்டம்.) அவர்கள் வாசுதேவநல்லூர் தெற்கு ஒன்றியக் கழகப்பொறுப்பாளராக நியமிக்கப்படுகிறார்.

ஏற்கனவே தேர்ந்தெடுக்கப்பட்ட ஒன்றியக் கழக அமைப்பின் பிற நிர்வாகிகள் இவருடன் இணைந்து பணியாற்றுமாறு கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

**“ அண்ணா அறிவாலயம்”**
சென்னை 18.
நாள் : 28.06.2025.

**துரைமுருகன்**
பொதுச் செயலாளர்
தி.மு.க.

## திராவிட இயக்க தீரர்கள் நினைவு நாள்

### காட்டம்பட்டி கா.கந்தசாமி
### ஜுன் 30 (2018)



கழகம் தொடங்கிய நாள் முதல் உறுப்பினராகி, கழகப் பணியாற்றியவர்.

1989–ல் கிணத்துக்கடவு சட்டமன்றத் தொகுதியில் கழகத்தின் சார்பில் போட்டியிட்டு வெற்றி பெற்று, அப்பகுதி மக்களின் நன்மதிப்பை பெற்றவர்.

மூன்று முறை காட்டம்பட்டி ஊராட்சி தலைவராகவும் – கிணத்துகடவு வட்டார நிலவள வங்கி தலைவராகவும் – கோவை மத்திய கூட்டுறவு வங்கி இயக்குனராவும் – மாநில கூட்டுறவு வங்கி இயக்குநராகவும் பொறுப்பு வகித்தவர்.

**தலைமைக் கழகம்**
**தி.மு.க.**